# விளம்பரம்™
VLAMBARAM™

416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 18 SEPTEMBER 15, 1999



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎: 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

*என்னுடைய சேவையே, எனது வெற்றி



- ✻ சூரியன் இறப்பதனால் பூமி என்னவாகும்? (பக். 9)
- ✻ ஆஸ்மா நோயுள்ளவர்கள் யோகாசனம் செய்யலாமா? (பக். 4)
- ✻ வாகனங்கள் வாங்கும்போது கொடுக்கும் வட்டி எவ்வளவு ? (பக். 3)
- ✻ நீங்கள் என்ன விலைக்கு வீடு வாங்கினால் நல்லது? (பக்.13)
- ✻ சினிமா ரசனையை திசைமாற்றியவர் யார்? (பக். 2)
- ✻ தொலைபேசி ☎ குடும்ப உறவுகளை........ (பக்.10)
- ✻ உலகசம்பியன் அவுஸ்திரேலியாவின் தோல்வி தொடர்கிறது, (பக்.6)
- ✻ தந்தை / தாய் போன்ற பிள்ளைகள் பிறப்பது சாத்தியமா? (பக். 2)



இழந்த முடியை மீண்டும் பெற வாருங்கள்

**சபோனாவிற்கு!**
*Sabona & Gift*

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

*Markham / Eglinton*

(கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)



**வீணை வகுப்புகள்**

வீணை வகுப்புகள்
நடைபெறுகின்றன.
புதிதாக சேர
விரும்புவோர் தொடர்புகொள்ளவும்



**(416) 759-3454**


## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

- இயல்பாக அதிகாலையில் எழுந்திருப்போர் ஏதேனும் ஒரு துறையிலாவது மேலோர் ஆவது திண்ணம்.
- ஒரு பொருள் உள்ள பாத்திரத்தில் இன்னொரு பொருளைப் போடமுடியாது; மனது என்னும் பாத்திரத்தைக் காலி செய்து கடவுளிடம் கொடுத்து விடு, அருளை நிரப்பி வைக்க அவர் அதைப் பயன்படுத்திக் கொள்வார்.
- ஒருவனுக்கு உண்மையான பக்தியும் அருள்தாகமும் உண்டாகுமானால் அவனை உய்விப்பதற்கு ஏற்ற ஞானம் குருவைக் கடவுளே அனுப்பி வைக்கிறார். அதைக் குறித்து யாரும் கவலைப்பட வேண்டியதில்லை.
- ஆலமரம் ஒரு இரவில் வளர்ந்து விடுவதன்று, மனபரிபாகம் நினைத்த மாத்திரத்தில் வந்து விடுவதன்று. பல்லாண்டு பல்லாண்டு அதைப் பண்படுத்திக் கொண்டே வரவேண்டும்.

## உலகக் கோலங்கள்

- சிவ பஞ்சலிங்கம்

**எல்சல்வடோர் (Elsalvador)**

மத்திய அமெரிக்காவில் ஆயுத கிளர்ச்சிகள், போராட்டங்கள் நடைபெறும் சிறிய நாடாகும். தெற்கே பசுபிக் சமுத்திரமும் வடக்கே குவாற்றமாலா (Guatemala). கொண்டுரஸ் (Honduras) ஆகியனவற்றினை எல்லையாக கொண்டது.

**இதன் பரப்பளவு:** 8124 ச..மை

**மக்கள் குடித்தொகை:** 5574.000 பேர்

**தலைநகரம்:** சான் சல்வடோர் [San Salvador]

**சமயம்:** ரோமன் கத்தோலிக்கர்கள் - 75%
ஏனையவை - 25%,

**மொழி:** ஸ்பானிஷ், நாடுயா (புராதன மக்களின் மொழி)

**சுதந்திரம் :** செப்ரெம்பர் 15/1821ம் ஆண்டு ஸ்பெயின் நாட்டிடன் ஆதிக்கத்தில் இருந்து சுதந்திரம் பெற்றது.

பதினான்கு திணைக்களங்களாக பிரிக்கப்பட்டு நிறைவேற்கு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, உபஜனாதிபதி

(தொடர்ச்சி 10ம் பக்கம்)

## உன்னை அறிந்தால்

*மனிதன் மனிதனா? சாபிணம் மருந்து குடிக்குமா? கெடுகுடி புத்தி கேட்குமா?, கெட விரும்புபவனை திருத்த முடியுமா? பட்டால் தான் புரியும், கண்கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம் பலன் தராது*

இதுதான் பலரிக்கு பலர் சொல்வது. அனுபவப்பட்டவர்களின் அறிவுரையை கேட்காதவர்களும், அனுபவப்பட்டவர்கள் காலம் காலமாக எழுதி வைத்த புத்தகங்களையாவது வாசித்து திருந்த வேண்டும் அல்லது தங்களை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒருவர் 60வயது வாழ்ந்து ஒரு புத்தகத்தை எழுதினார் எனில், அதனை வாசிப்பதால் அவருடைய 60 வயது அனுபவத்தை நாங்கள் பெறக்கூடியதாக இருக்கும். பலரிற்கு பலதடைவகள் சொன்னாலும் புரியாது. சிலரிற்கு ஒரு தடவை சொன்னாலே புரிந்து விடும். காலம், பொன்னானது, சென்றால் திரும்பாது.

*சிந்திக்கவும்..... செயல்படவும்* நெற்றிக்கண்ணன்


**விளம்பர வினாடி வினா! CTBC RADIO ✡ SUNDAYS ✡ 7:30 PM**

**SINGAPORE CELLULAR**



Bell Mobility

CANTEL

FREE PAGER $100. Only

Call for Details

For more Information: சக்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

**துரித பணமாற்றுச் சேவை**



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221



**சிவாகம கிரியா பீடம்**

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
SCARBOROUGH, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978

# அறிவும் ஆக்கமும் (41)



- விஜே குலத்துங்கம்

**விஜே குலத்துங்கத்தின் "அறிவுக்கு வேலை கொடு" வானொலி நிகழ்ச்சியை CTR வானொலியில் ஒவ்வொரு புதன் இரவு 8 மணி முதல் 9 மணி வரை கேட்டு மகிழலாம்.**

இந்த நூற்றாண்டின் அரிய விஞ்ஞான சாதனைகளுள் ஒன்றுதான் Cloning ஆகும். Cloning மூலம் பிறந்த "Dolly" என்ற செம்மறி ஆட்டுக்குட்டியின் கதை பற்றி முன்னர் ஒரு இதழில் எழுதியிருந்தேன். அதைப் படிக்காதவர்களுக்காக சுருக்கமாக அதைப்பற்றிப் பார்த்து இந்த முறை பார்க்க வேண்டிய விடயங்களைப் பார்ப்போம்.

இயற்கையில் ஆணின் ஒரு கலமும், பெண்ணின் ஒரு கலமும் சேர்ந்துதான் புதிய உயிர் உண்டாகும். வழக்கமான உடலின் கலத்தில் நிறமூர்த்தங்கள் - Chromosomes சோடிகளாக காணப்படும். சோடிகளாக இருந்தால்தான் உடல் இழையமாக வளரும் வல்லமை கொண்டதாக இருக்கும். ஆணின் இனப்பெருக்க கலம் அல்லது விந்துக் கலம் உண்டாகும் போது சோடியின் ஒரு பகுதிதான் அதனுள் செல்லும். அதேபோல் பெண்ணின் முட்டைக் கலத்தினுள்ளும் சோடியின் ஒரு பகுதி ஆணில இருந்தும், ஒருபகுதி பெண்ணில் இருந்தும் வருவதால் உண்டாகும் புது உயிர், வேறுபட்ட இயல்புகளை சில இயல்பு தகப்பனைப் போன்றும், சில தாயைப் போன்றும் இருக்கும்.

Cloning செய்த போது, செம்மறி ஆடொன்றின் முட்டைக் கலத்தினுள் இருந்த சோடியின் ஒரு பகுதி மாத்திரமே இருந்த கருவை அகற்றிவிட்டு, தாய் ஆட்டின் சாதாரண உடற் கலத்திலிருந்த, சோடிகளாக நிறமூர்த்தம் உள்ள கருவை எடுத்து அது முட்டையினுள் செலுத்தப்பட்டது. பின்னர் இம்முட்டையை கருப்பையினுள் வைக்கப்பட்டது. சோடியின் இருபகுதியும் இருந்ததால் முட்டை ஒரு புதிய உயிராக வளர்ந்தது. சோடியின் இரு பகுதியும் தாயிலிருந்து வந்ததால், தாயை ஒத்த அதே அமைப்பு, உருவம், இயல்புகள் உடைய அதாவது அச்சொட்டான குட்டியொன்று உருவாகியது. இந்த Cloning இனால் உருவாகிய செம்மறியாட்டுக் குட்டிக்கு Dolly எனப் பெயரிடப்பட்டது. இந்த Dolly ஆடு இப்போது சாதாரண ஆட்டைப் போன்று குட்டிகளையும் ஈன்று சுகமாக உள்ளது.

இதேமுறை மனிதரிலும் கையாளப்பட்டு, தாயையோ அல்லது தகப்பனையோ அப்படியே உரித்து வைத்த மாதிரி உள்ள பிள்ளையை உருவாக்கலாம். அதாவது எவரில் இருந்து கலம் எடுக்கப்படுகின்றதோ அவரைப் போன்றே பிள்ளையும் தோற்றம் அளிக்கும். ஆனால் இம்முறை நடைமுறைக்கு வந்தால பல சமுதாய கலாச்சார பிரச்சினைகள் உருவாகும் என பலர் கருதியதால் பல நாடுகள் மனிதரில் Cloning செய்யும் ஆராய்ச்சியை தடை செய்துள்ளது.

இயல்புகளை தீர்மானிப்பது நிறமூர்த்தங்களில் காணப்படும் பல்லாயிரக கணக்கான Genes ஆகும். ஒவ்வொரு Gene ம் ஒவ்வொரு இயல்புக்கு காரணமாயுள்ளது. இந்த Gene ஐ ஒரு உயிரில் இருந்து எடுத்து வேறொரு உயிரினுள்ளும் செலுத்த முடியும். கடந்த வாரம் இதையொத்த பரிசோதனை ஒன்றின் முடிவுகள் சென்றவாரம் வெளியிடப்பட்டது. இந்தப் பரிசோதனையில் NR2B என்ற Gene பல பிரதிகளாக எலியினுள் செலுத்தப்பட்டது. கற்கும திறனையும், ஞாபக சக்தியை அதிகரிக்கக் காரணமாயுள்ள இந்த Gene மூலம் இந்த எலிகளுக்கு கற்கும் திறனும் ஞாபக சக்தியும் அதிகரிக்கப்பட்டதை பல பரிசோதனைகள் மூலம் நிரூபித்துள்ளார்கள். எனவே எதிர்காலத்தில் விஞ்ஞானிகள் புத்திக் கூர்மையுள்ள மனிதர்களை உருவாக்கும் வல்லமை படைத்தவர்களாக இருப்பார்கள்.

இதையொத்த செயற்பாடுகள் தாவரங்கள், பயிர்கள் ஆகியவற்றில் கடந்த சில ஆண்டுகளாக செய்யப்பட்டு வருகின்றது. இப்படி தாவரங்களில் Gene மாற்றியமைக்கப்பட்டு, புதிய தாவரங்கள் உருவாக்கப்படுவது Genetically Modified Grop எனப்படும். அதாவது பிறப்புரிமையமைப்பு மாற்றப்பட்ட தாவரங்கள் ஆகும். உதாரணமாக சில தாவரங்கள் குறிப்பிட்ட பூச்சியினத்தால் தாக்கப்படும். ஆனால் அதே நேரத்தில் அப்பூச்சிகள் வேறு சில தாவரங்களை தாக்கமாட்டாது. எனவே பூச்சி தாக்காத தாவரங்களில் இருந்து, அப்பூச்சியை எதிர்க்கவல்லை இயல்பைக் கொடுக்கும் Gene பிரித்தெடுக்கப்பட்டு, குறிப்பிட்ட பயிரினுள் செலுத்தப்படும். பூச்சியின் அழிவில் இருந்து காப்பாற்றப்படும். இதனால் கிருமி நாசினிக்கு செலவழிக்கப்படும் பணத்தின் அளவு குறைக்கப்படலாம். இந்தியாவல் 5% பயிர்ச்செய்கை நிலங்களில் பருத்தி பயிரிடப்படுகின்றது. ஆனால் மொத்த அளவில் 50% கிருமிநாசினிகள் பருத்திப் பயிருக்கே உபயோகப்படுத்தப்படுகின்றது. அண்மையில் இந்த Genetically Modified விதைகள் பாவிப்பதன் மூலம் கிருமி நாசினியின் தேவை அற்றுப் போயுள்ளது.

கூடிக்கொண்டு போகும் சனத்தொகையின் உணவுத் தேவையை சமாளிக்க, இருக்கும் நிலங்களின் விளைச்சலை அதிகரிக்க வேண்டும். முக்கியமாக களைகள், பூச்சிகள் ஆகியவற்றால் ஏற்படும் அழிவுகளை தடுத்தால் விளைச்சலை பல மடங்கு அதிகரிக்கலாம். உதாரணமாக ஆபிரிக்காவின முக்கிய தானியப்பயிர்களாகிய சோளம், Millet, Sorghum, மற்றும் பருப்பு வகை பயிர்கள் ஆகியவற்றை Witch weed எனப்படும் களையானது தாக்கி மொத்த விளைச்சலை 40 % வீதத்தால் குறைக்கின்றது. இந்த களை கிருமி நாசினியால அழிக்க முடியாதது. இதற்கு இந்த பிறப்புரிமையமைப்பு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் அவசியம்.

மற்றும் விளைச்சலின் அளவு, புரதத்தின் அளவு குறைந்தளவு Cholesterol, அதிக சுவை ஆகிய இயல்புகளும் இந்த முறையால் அதிகரிக்கப்படலாம். இந்த வகையான உயிரியல் பொறிமுறை Biotechnology மற்றும் Genetic Engineering ஆகிய துறைகளுக்கு தற்போதும் எதிர்காலத்திலும் நல்ல தொழில் வாய்ப்பு உள்ளது.

ஆனால் அந்த தேவைகளுக்கு ஏற்ற அளவு விவசாய பட்டப்படிப்பு மாணவர்கள் குறைவு என Guelph University ஐச் சேர்ந்த பேராசிரியர் ஒருவர் அண்மையில் பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் கூறியிருந்தார். இத்துறையில ஆர்வம் உள்ளவர்கள், இந்த துறையை பட்டப்படிப்புக்கு தெரிவு செய்தால் நல்ல எதிர்காலம் உண்டு.

*******************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் - 61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.


10 வருடங்களாக தமிழர் மத்தியில்

# யோகாஸ்

☎: (416) 267-0408

615 KENNEDY RD.

Scarborough, Ont.

இலங்கை, இந்திய, கனேடிய உணவுப் பொருட்கள் உடன் ஆட்டிறைச்சி, கோழி, மாடு, கணவாய் மற்றும் சகல விதமான உணவுப் பொருட்களுக்கும் நாடுங்கள்


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 9

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | ■ | 3 |
| | ■ | ■ | | ■ | ■ | ■ | |
| | ■ | 4 | | ■ | | | 5 |
| | ■ | | ■ | | ■ | ■ | |
| | 6 | ■ | | | 7 | | 8 |
| ■ | ■ | | | 9 | 10 | ■ | |
| | ■ | ■ | | ■ | 11 | | |
| 12 | | | 13 | | | ■ | ■ |

**இடமிருந்து - வலம்**

1. அந்தணன்
4. பாரம்
5. பயிரிடப்படாத நிலம் (வல-இட)
6. ஒலி (வல - இட)
8. பழமையானது (வல-இட)
10. போர் வீரர் அணிவது (வல-இட)
1. இதன் எதிர் சொல் இடம்
12. பெருவிரல்

**மேலிருந்து கீழ்**

1. காலணி
2. தொன்மை
3. அரசியின் வதிவிடம்
4. உருசி
7. செய்தி
9. காடு (கீழ் - மேல்)
12. விழி (கீழ்-மேல்)
13. வெறுப்பு

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் SEPTEMBER 27, 99க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஒ | ட் | ட | க | ம் | ■ | லா | உ |
| த் | ■ | ■ | ■ | ■ | ஈ | ■ | தா |
| து | றை | மு | க | ம் | ■ | தை | சீ |
| க் | ■ | ■ | ம் | ■ | க | ■ | ன |
| கொ | த் | த | ம | ல் | லி | ■ | ம் |
| ள் | ■ | ■ | ல் | ■ | யு | ■ | ■ |
| ■ | ■ | ற | ■ | ■ | க | ஞ் | சி |
| அ | ந் | தி | வா | ன | ம் | ■ | கை |

**#97இல் வெற்றி பெற்றோர்**

1) MRS.B.K.THURAIRAJAH DONMILLS

2) NIVETHA CHANRKUMAR, NORTH YORK




# DMR



துரித பணமாற்று சேவை

இலங்கை இந்தியா

சிங்கப்பூர் ஐரோப்பிய நாடுகள்

ஆகியவற்றிற்கும் பணம் அனுப்ப அல்லது அங்கிருந்து எடுத்து வர உடன் தொடர்பு கொள்ளுங்கள்

Tel: (416) 264-8019

262 Markham Road , Scarborough, Ont.

( மேல் மாடி / 2nd floor)

# TAMIL INSURANCE CLAIMS CONSULTANT

தமிழில் இலவச ஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

*தகுந்த ஆலோசனை *சட்ட உரிமை *உரிய நஷ்ட ஈடு

*விபத்துக்குள்ளாலியவர் சம்பள இழப்பீடு

*மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும் அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையில் பெற்றுக்கொள்ள 12 வருடகால அனுபவமுள்ளவர்

**ரவி நடராஜா**


TEl:(416) 245-6555 Fax: (416) 245 7766

2095 Weston Rd. #201 (South of HWY 401) Toronto Ont. M9N 1X7

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
Motor shampoo
Interior shampoo
Exterior wash & waxing

ONTARIO'S DRIVE CLEAN




Repairs
safety certification
overall maintenance
under coating &
Rust proofing

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

முகவரி: 2500 LAWRENCE AVE. EAST, UNIT #11
SCARBOROUGH, ONT. ( MIDLAND & LAWRENCE )

☎ [416] 285-4998



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")

* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING

>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**
718 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5



## AJI AUTO WORKS



❋ Mechanical ❋ Auto Electrical Repairs
❋Specialized Brakes ❋Major & Minor Repairs on Import and Domestic Cars
❋ saftly Inspection Certification
VEHICLE EMISSIONS INSPECTION

ONTARIO'S DRIVE CLEAN

T. Sabanathan
T. Sivapatham

Tel: 752-2642
151 Nantucket Blvd, Unit 5,
Scarborough. Ont. M1P 4R5


<u>ஒரு வாகனம் வாங்கும் போது நீங்கள் வட்டியாக செலுத்தும் பணம் எவ்வளவு என்பது உங்களுக்கு தெரியுமா?</u>



நீங்கள் புதியதோ, பழையதோ வாகனத்தை வாங்கும் போது 99% மானவர்கள் கடனில் அதை எடுத்து மாதாமாதம் கட்டித்தான் அந்தக் கடனை முடிக்கிறார்கள். அப்படித்தான் கனடாவில் 99வீதமானவர்கள் எதையுமே வாங்குவது உண்டு. இங்கு உதாரணத்திற்கு சில வட்டி வீதங்களை எடுத்து அதில் உள்ள வேறுபாடுகளை தருகிறேன். உதாரணத்திற்கு நான் எடுத்துக் கொண்ட தொகை $10,000. இந்த தொகையை 36, 48, 60 மாதங்களுக்கு என்று பிரித்துத் தருகிறேன்.

| வட்டி வீதம் | 36 மாதக் கட்டணம் மொத்த வட்டி | 48 மாதக் கட்டணம் மொத்த வட்டி | 60 மாதக் கட்டணம் மொத்த வட்டி |
|---|---|---|---|
| 1.9% | $285.99<br>$295.64 | $216.52<br>$392.96 | $174.84<br>$490.40 |
| 2.8% | $289.93<br>$437.48 | $220.46<br>$582.08 | $178.80<br>$728.00 |
| 3.8% | $294.35<br>$596.60 | $224.90<br>$795.20 | $183.26<br>$995.60 |
| 4.8% | $298.81<br>$757.16 | $229.39<br>$1010.72 | $187.80<br>$1268 |
| 5.8% | $303.31%<br>$919.16 | $233.93<br>$1228.64 | $192.40<br>$1544 |
| 6.8% | $307.86<br>$1082.96 | $238.54<br>$1449.92 | $197.07<br>$1824.20 |
| 7.8% | $312.44<br>$1247.84 | $243.19<br>$1673.12 | $201.81<br>$2108.60 |
| 8.9% | $317.53<br>$1431.08 | $248.38<br>$1922.24 | $207.10<br>$2426 |
| 9.9% | $322.20<br>$1599.20 | $253.15<br>$2151.20 | $211.98<br>$2718.80 |

இவ்விடத்தில் <u>ஒரு முக்கியமான</u> விடயத்தை நிச்சயம் கூறவிரும்புகிறேன். நீங்கள் பத்திரிகைகளில் பார்க்கலாம் 0%, 1.9% என்று தயாரிப்பாளர்கள் தங்கள் தயாரிப்புகளுக்கு வட்டி வீதம் அறவிடுகிறார்கள். இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் அதில் உள்ள முக்கிய சாராம்சத்தை சரியாக புரிந்து கொள்வதுதான் இப்படியான வட்டிவீதங்கள் 48 மாதங்களுக்கு தான் கிடைக்கக கூடியதாக இருக்கும். நாம் அதனைக் கருத்தில் கொள்ளாது குறைவற்ற வட்டி வீதம் என்று நினைத்துக் கொண்டு 60 மாதங்களுக்கு கடனை எடுக்கும் போது 9% க்கும் கூடுதலான வட்டி அறவிடப்படுகிறது. அதனால் இந்த விடயத்தை கவனிப்பது நல்லது. மேலதிக விபரங்களுக்கு- ***சோதீஸ்*** *Cell (416) 704 -1179*


*We are entering 5 th year service in Scarborough.*



## Better Work ... Less Money

N.T.E Auto Inc.
New Trade Engineering

We service
EUROPEAN, JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.


" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "

We will reduce the worry and expense of maintaining your car by offering:
- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

என். ரி. ஈ. ஓட்டோ இங்.

NTE AUTO INC.
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎(416) 750 - 1573
SIVABALAN





# ஆரோக்கிய வாழ்வு (41)

- *N.* செல்வசோதி

## ஆஸ்துமா, சளி, சைனஸ் தொல்லைகள் நீங்க

ஆஸ்துமா (Asthma) சளி, சைனஸ் இதுபோன்ற பல வியாதிகள் மனிதனின் கழுத்திற்கு மேற்பட்ட பாகத்தை ஆட்டி வதைத்துக் கொண்டுதான் இருக்கின்றன. இன்றைய நாகரீக உலகின் பெரும்பாலான மனிதர்கள் இந்த வியாதிகளின் தாக்கத்திற்கு ஆளாகின்றனர். பின் மருத்துவர்களை நாடுகின்றனர். மாத்திரைகள் பல, மருந்துகள் பல தினமும் விழுங்குகின்றனர். நோயின் தாக்கம் குறைகிறது. சில நாட்களின்பின திரும்பவும் நோயின் தொல்லைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. இந்நிலை தொடரும் போது வாழ்வில் வெறுப்பு ஏற்பட்டு நிம்மதியையே குலைத்து விடுகிறது.

மேற்குறிப்பிட்ட வியாதிகளிலிருந்து முற்றாக நிவாரணம் பெறுவதற்கு "யோக சிகிச்சை" முறையொன்றுதான் ஒரேயொரு வழி. அதுதான் இந்திய யோகிகள நமக்களித்த "கபாலபாதி" என்னும் மூச்சுப் பயிற்சி முறை (Pumping Breathing)


இந்த மூச்சுப் பயிற்சி முறையால் மூளையிலுள்ள செல்கள் தூண்டப்பட்டு நன்கு இயங்கச் செய்யும் கண்கள், மூக்கின் உட்புறம், வாய்வரையுள்ள மண்டையோட்டுத் துவாரப்பகுதி அழுக்கின்றிச் செய்ய உதவும் கிரிகை இது. மண்டை ஓட்டின் உட்புறமுள்ள சளிகள், அழுக்குகள், முகத்தின் கன்னங்கள், புருவங்களின் உட்பகுதிகளிலுள்ள தேவையற்ற நீர் முற்றாக வெளியேறி சதைப்பகுதி சுத்தமாக்கப்படுகிறது.

தலை முழுகுதல், மழையில் நனைதல், பனிக்குளிரில் நிற்றல் இவற்றால் தலை, நீரைஇழுத்து விடுகிறது. இந்த நீரானது தொழில்பாடு மந்தமடையும் போது சிலருக்கு கண்ணிலும் மூக்கிலும் நீர் வடிதல், வாயில் ஜொள் வடிதல், தும்முதல் என்பன ஏற்படுகிறது. ஆஸ்துமா (Asthma) வியாதி சிலருக்கு சிறு பிள்ளைப் பருவத்திலிருந்தே தொடர்ந்து வருகிறது. பலருக்கு நடுத்தர வயதிலிருந்தே பற்றிக கொள்கிறது. சிலருக்கு தூசி ஒவ்வாமையினால் சைனஸ் தொல்லை உண்டாகின்றது.

மேற்குறிப்பிட்ட வியாதிகளிலிருந்து முற்றாக விடுபடுவதற்கு கபாலபாதி மூச்சுப பயிற்சி ஒன்றுதான் சிறந்த வழி. மொத்தத்தில் மூச்சு சம்மந்தமான உறுப்புகள மூளை, அடிவயிறு என்பனவற்றை நலம் பெற வைக்கிறது.

### செய்யும் முறை கபாலபாதி (Pumping Breathing)

பத்மாசனத்திலோ, வஜ்ராசனத்திலோ அமர்ந்து கொண்டு உடலைத் தளர்த்தி நிமிர்த்தி அமர்ந்து கொள்ளவும் பின் மூச்சை மெல்ல உள்ளிழுத்து வெளிவிடவும்.



Close both nostrils and retain the breath to a count of 16.

அடுத்து அடிவயிற்றை உள்ளிழுத்துக் கொண்டு மூச்சை வேகமாக வெளியே உதறவும் அடிவயிற்றை விரியவிட்டு மூச்சை இயற்கையாக அதிக பிரயத்தனமின்றி உள்ளிழுக்கவும். இவ்வாறு மூச்சை வெளியே உதறுவதையும பின் உள்ளிழுப்பதையும் புஸ்புஸ் என்று வேகமாகச் செய்யவும் ஒரு வினாடிக்கு ஒருமுறை என 20 தடவை செய்யவும் பின் படிப்படியாக 50 முறை அளவுக்குச செய்யப்பழக வேண்டும்.

இந்த கபாலபாதி மூச்சு உதறும் முறையில் அடிவயிறு அசைவு மிகவும் முக்கியமானது அடிவயிறு முன்னால் தள்ளி பின்னால் ஒடுங்குவது விரைவாக நடக்கும். இப்பயிற்சியை கண்டிப்பாக வெறும் வயிற்றில் தான் செய்யவேண்டும்.

இப்பயிற்சியைச் செய்யும்போது முதலில் சளியும், அழுக்கும் வெளியேறும் பின வெறும் காற்று மட்டும் வெளிவரும்.

**பயன்கள்**

மூளை நரம்புகள் புத்துயிர் பெறுவதோடு இரத்தம் சுத்திகரிக்கப்பட்டு கரியமிலவாயு வெளியேறிவிடுகிறது. அடிவயிற்று நரம்பு புத்துணர்வு பெற்று உடல் உஷ்ணம் அதிகரிக்கிறது. மூக்குத் துவாரங்களும், மூச்சு சம்பந்தப்பட்ட குழாய்களும் சுத்தம் செய்யப்படுகிறது.

தூசி, புகை ஒத்துவராமை, ஆஸ்துமா, மூச்சடைப்பு, நிமோனியா, டிபி முதலிய நோய்களை அணுகவிடாமல் பாதுகாக்கிறது. இந்த கபாலபாதி மூச்சு பயிற்சியை செய்து சில நாட்களிலேயே பலன்களை அனுபவிக்க முடியும். சில மாதங்களில் சுவாசத்தில் முன்னேற்றத்தையும் முகத்தில் பொலிவையும் காணலாம். மேலும் காதுவலி, காதில் சீழ் வடிதல் ஏற்படாது. சளி, தடிமல என்பன எக்காலமும் அணுகாது.

இப்பயிற்சியை முதலில் யோகாசன ஆசிரியர் துணையுடன் பழகுவது சிறந்தது.

- *நன்றி யோகக்கலை*

**யோகாசன வகுப்பு ஆரம்பமாகின்றது**

எதிர்வரும் ஞாயிறு, செப்டம்பர் 19,99 ந் திகதியிலிருந்து
யோகாசன வகுப்பு ஆரம்பமாகின்றது
இடம்: Woburn Collegiat e (Markham /Ellesmere)
நேரம்: 7:30 am - 8:30am தொடர்புகளிற்கு - சத்தி: 291-5853

**Neelam SILK**

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத்
தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை
**நீலம் சில்க்**
அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது
ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான
பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)
CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12



Professional Photographer - கதிர்
☎: (416) 750-8118
2381 EGLINTON AV. E.
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH



**கிராமத்து விருந்து**

RESTAURANT, CATERING, TAKE OUT L.L.B.O.
603 Kennedy Road,
Scarborough, Ont.
☎: (416) 266-4240

கனடாவில் முதன் முதல் தலைவாழையில் விருந்து படைத்தவர்கள்

2 மட்டன் அல்லது Beef றோள்ஸ்
2 மட்டன் அல்லது மீன் பற்றீஸ்
2 மீன் கட்லட்
2 வடை
99 சதம்


கொத்துரொட்டி - ஆடு, மாடு, கோழி, மரக்கறி
அப்பம் - பால், முட்டை, பிளேன்
$3.99

கேட்டரிங் ஓடர்களுக்கு அழையுங்கள் - (416) 266-4240

Easy Weight Lost Programme *Latha: 416-421-2164*

# முத்துக்குறள் மூன்று

ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி,
பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



உலகமக்கள் உயர்ந்த வாழ்வு வாழ்வதற்காக மனிதனுக்கு மனிதன் சொன்ன சிறந்த அறிவுரைகளில், அறிவுரைகளுக்கு எல்லாம் அறிவுரையாய் ஒரு கொடுமுடியாய் விளங்கும் ஒரு வழிகாட்டியே திருக்குறள். மனிதனுக்கு வரும் என்ன பிரச்சனைக்கும் தீர்வுகாண நமக்கு திருக்குறளிலே வழி காட்டப்பட்டுள்ளது. ஆயுள்வேத வைத்தியத்திலே மனிதன் என்றும் பதினாறாய் நோய்நொடியின்றி வாழ்வதற்கு காயாகற்பம் அமுத சர்க்கரை சர்வரோக நிவாரணி, சர்வரோக சஞ்சீவி போன்ற மருந்துகளை கொடுப்பதுண்டு. அதேபோலத் தான் உலகமக்கள் பெற்ற காயாகற்பம் திருக்குறள். நாம் எவ்வளவு தூ[illegible] பணம், பணம் என்று அலைகிறோமோ அதேஅளவு வேகத்தையும், மோகத்தையும், அறிவைப் பெறுவதிலும் செலவிடுவோமேயானால் அதுவும் தினசரி வாழ்வில் திருக்குறள் காட்டும் நல்வழியைப் பின்பற்றுவோமேயானால் நம் வாழ்வு அருளும், பொருளும் நிறைந்த ஒரு அமைதிப் பூங்காவாக மாறாதா?

அண்மையில் கனடாவில் நடைபெற்ற தமிழ்மக்களின் கோர மரணங்கள் என்னை மட்டுமல்ல கனேடியர்களையும், குறிப்பாக தமிழ் மக்களையும் மிகவும் பாதித்ததற்காக ஒருபுறம் வெட்கமும், மறுபுறம் வேதனையும் அடைகிறேன். அந்தத்த குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் இறந்த ஜீவாத்மாக்கள் பரமாத்வாவின் திருப்பாதங்களைச் சென்று ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

எது எப்படி இருப்பினும் மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுலகிற்கு பூப்பறிக்கவும், காலமெல்லாம் இன்பவெள்ளத்தில் நீந்துவதற்கு மட்டும் பிறக்கவில்லை. எந்த ஒரு விசயத்திற்கும் இரு பக்கங்கள் உண்டு. இரவென்றால் பகலும், இன்பமென்றால் துன்பமும், லாபமென்றால் நஷ்டமும், பிறப்பென்றால் இறப்பும், விருப்பென்றால் வெறுப்பும், ஆஸ்திகம் என்றால் நாஸ்திகமும் என்று இவ்வாறாக பல விஷயங்களைக் கொண்டதே உலக வாழ்வு. ஆகவே மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் ஒருசில துன்பங்களை விரும்பியோ வெறுத்தோ அதை ஏற்று வாழ நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். அத்தோடு வாழ்வில்வரும் இன்பதுன்பத்தை இரண்டு கண்ணாகப்போற்றி வாழ்வில் நீதியாகவும், நியதியாகவும் ஏற்றுவாழ கற்றுக்கொள்ள வேண்டும். மனிதனுக்கு வரும் துன்பம் துயரங்களிற்கு கொலை, தற்கொலைதான் தீர்வும், தீர்ப்பும் என்றால் உலக சனத்தொகை என்றோ அழிந்து பட்டிருக்கும். இன்று அவர்கள் துன்பத்தைத் தாங்கி சுமை தாங்கிகளாகவும், இடிதாங்கிகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பஞ்சைப் போட்டு நெருப்பை அணைக்க முடியாது, பாவத்தைப் பாவத்தால் தீர்க்க முடியாது. துன்பத்திலிருந்து தற்கொலை செய்யும் போது மேலும் பாவத்தைக் கூட்டிக் கொள்கிறோம். பாவத்திற்கு பிராயச் சித்தம் தேடவே இந்த :பிறவி எடுத்து உள்ளோம். ஆங்கிலத்திலே [illegible]ார்கள் 'Don't find fault, find remady.

நமக்கு நம் ஊழ்வினைப்பயனால் வரும் துன்பங்களை எண்ணி அந்த நினைவுகளில் மூழ்கி மேலும் துன்பத்தை வளர்த்துக் கொள்ளாமல் அல்லல்ப் பட்டு அவதியுறாது நம்மை நல்வழிப்படுத்தி பாவவினைகளைப் போக்கி நமது ஆத்மாவை மகாத்மாவாக மாற்றி இறைவன் திருவடிகளை அடைவதற்க்கு வழி செய்ய வேண்டும். துன்பங்களில் பலவிதமான துன்பங்கள் உண்டு. அதில் மனக்கவலை என்கின்ற Depression என்கின்ற "Paranayo" நோய் மகா கொடியது. துன்பங்களுக்கெல்லாம் அதிபதி என்று சொல்லலாம்.இந்த நோய் மிகவும் விசித்திரமானது உலகத்திலுள்ள துன்பமெல்லாம் தன்னிடம் வந்து விட்டதாக உணர வைக்கும். எந்நேரமும் மனதில ஒரு இருள் கவிந்து மனதை சஞ்சலத்தில் சஞ்சரிக்க வைக்கும். எந்நேரமும் இது என்ன வாழ்க்கை, இனி எனக்கு எதிர்காலமுட்டா, இந்த வாழ்க்கையை நான் எப்படி வாழ்ந்து முடிக்கப் போறேன். எனக்கினி எதிர்காலமுண்டா என்னை யாரோ கொல்லப் பார்க்கிறார்கள், நானே தற்கொலை செய்து கொண்டால் என்ன என்று மனதில் இருள் சூழ்ந்த சூழ்நிலையை, மனப்பிரமையை மனக்கிலேசத்தை அர்த்தமில்லாத கற்பனையை, எனக்கு யாரோ பில்லி சூனியம் செய்து விட்டார்களா என்றெல்லாம் பலவாறாக சிந்தித்து எவ்வித முடிவுக்கும் வரமுடியால் திணறித் திண்டாட வைக்கும். இந்த நோயினால் சிக்குண்டு என்னிடம் வரும் நோயாளிகளுக்கு நான் கொடுக்கும மருந்துகளை விட முக்கியமான மருந்து நான் கொடுக்கும் அறிவுரைகளும் தெய்வத்தை வழிபட செய்த முறைகளுமாகும். சிலநோய்களுக்கு வைத்தியரிடம் மருந்து இல்லை. இறைவழிபாட்டாலேயே மாற்றலாம். அதிலும் முக்கியமாக மனக்கவலை என்கிற Depression க்கு மருந்து இறைவனுடைய பாதாரவிந்தங்களே.

**'தனுக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது."**

இதிலே தனக்கு எந்த விதத்திலும் ஈடுஇணையற்ற ஒப்பு உவமையற்ற மிகஉயர்ந்த சிறந்த இடத்தில் நமக்கு இவ் உயிரை அளித்து எல்லா செ[illegible]ங்களையும் அளித்து நம்மை சிறப்பாக வாழவைத்துக் கொண்டிருக்கும் அ[illegible]க கருணாநிதியின் பாதரவிந்தங்ளை சரணடைந்து என்நேரமும் இறைவன சிந்தனையுடன், வந்தனையுடன் வாழ்வோமேயானால் அதுவே மனக்கவலைக்கு ஒரே மருந்து. ஆகவே நான் உங்களுக்குச் சொல்லும் ஒரே வழி நல்வழி என்னவென்றால் என்நேரமும் தெய்வத்தை மறக்காது தெய்வத்தை நிந்திக்காது சிந்தித்து நீங்களும் உங்களை சார்ந்தவர்களும் வாழ வழிகாட்டுங்கள். இதுவே நீங்கள் உலகிற்கு செய்யும் அரும்பெரும் நன்மையாகும்.

**"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"** எந்தவிதமான விருப்பு வெறுப்பற்ற சமநிலையில் நின்று எம்மைக் காத்தருளும் அந்தப் பற்றற்ற இறைவனை நாம் தியானித்தால் நம் துன்பங்கள், பந்த பாசங்களிலிருந்து விடுபடலாம்.

ஆகவே இவற்குக்கெல்லாம் என்னைப் பொறுத்தவரையில் தீர்வு நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதியே. தமிழ் சமுதாயம் தெய்வசிந்தனையுடன் காலமெல்லாம் வாழ்ந்தது. கடந்த 2 தசாப்தங்களாக சூழ்நிலைக் கைதிகளாக உலகெல்லாம் அலைந்து திசைமாறி, தடுமாறி, மனம் மாறி, உருமாறி ஏனோதானோ என்று வெறுப்புள்ள மனநிலையை அடைந்துள்ளார்கள். எதிர்பாராத தாக்கத்தால் பாதிப்புற்று ஏக்கமான சூழ்நிலையில் வாழ்கிறார்கள். எந்த சூழ்நிலையிலும் நாம் செய்யத்தக்க ஒரு நல்லகாரியம் தெய்வத்தை வழிபடுவது ஒன்றே.

(தொடரும்)


## வெள்ளை மயிரிற்கு - விடுதலை

இந்தியாவில் மூலிகைகள் மூலம் தயாரிக்கப்பட்ட தரத்தில் சிறந்த சாயம் (DIE) இப்பொழுது இங்கு கிடைக்கின்றது. பாவித்த பலர் புகழ்கிறார்கள். முகத்தில் சாயம் பிடிக்காது. இலகுவாக பூசமுடியும். கறுப்பு, மண்ணிறம் நிறங்களில் கிடைக்கும். மேலதிக தொடர்புகளிற்கு

☎: (416) 267-0414 / Cell: 707-8956

6 வருடமாக இயங்கிவரும் ஸ்தாபனம்

## அப்சராஸ்



RESTAURANT & CATERING

* கொத்துரொட்டி எல்லா வகைகளும் $3.50 (TAKE-OUT ONLY)
* வாழை இலைச் சாப்பாடு $6.00 ( " )
* "மண்வாசனை" வாழை இலைச் சாப்பாடு
* எல்லாவகையான வைபவங்களிற்கும்



அழையுங்கள் (416) 412-6164

2778 Kennedy Road, Scarborough, Ont. (Kennedy/Finch)



## நான் ஒரு வழக்கறிஞர் இல்லை


குடிவரவுச் சட்டம்
Immigration Law

குற்றவியல் சட்டம்
Criminal Law

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை - Permanent Resident
குடியுரிமை - Citizenship
குடும்ப ஒன்றிணைவு - Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



*வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?*

அடுத்து செய்யவேண்டியது என்ன?



முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...

*பின் இவரை அழையுங்கள்...*

எஸ்.கே. தீசன்
(416) 631-6322

## விளம்பர வினாடி வினா

*இந்தப் போட்டி நிகழ்ச்சி பிரதி வாரந்தோறும் ஞாயிற்றுகிழமை மாலை 7:30 மணியளவி 24 மணிநேர தமிழ் வானொலியில் கேட்கலாம்*

*இப்போட்டியின் நோக்கம் - "தமிழ் மக்களின் அறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்"*

பெயர் - விளம்பர வினாடி வினா!
நிகழ்ச்சி - ½ மணி நேரம்
பரிசு - $25 பெறுமதியான பத்திரம் (Voucher)
குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனத்தில் பாவிக்க முடியும்

நிபந்தனைகள் -
1. 10 கேள்விகள் கேட்கப்படும். 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு விடை தரவேண்டும்
2. 5 வினாடிகள் வழங்கப்படும் நிகழ்ச்சி நடத்துபவரின் முடிவே இறுதியானது.
3. குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவரிற்கு மேற்பட்டவர் 7 அல்லது 7 இற்கு மேற்பட்ட வினாக்களிற்கு சரியாக விடை கூறினால், அவரே வெற்றி பெற்றவராக கொள்ளப்படும். மேலும் இரண்டிற்கு மேற்பட்டவர்கள் ஒரே எண்ணிக்கையான சரியான பதில்கள் கூறினால், நிகழ்ச்சி நடத்துனர் குலுக்கல் மூலம் ஒரு அதிஸ்டசாலியை தெரிவு செய்வார்.

குறிப்பு
1. வினாக்களின் விடைகள் ஏற்கனவே விளம்பரம் பத்திரிகையில் வந்திருக்கும்.
2. வினாவிற்குரிய விடை ஒன்றிற்கு மேற் பட்டதாக இருப்பினும் விளம்பரம் பத்திரிகையில் வந்தவிடையே சரியெனக் கொள்ளப்படும்.
3. இப்போட்டி நிகழ்ச்சி விளம்பரம் பத்திரிகையின் ஆதரவில் நடைபெறுகின்றது.

பரிசு வழங்கும் நிறுவனம்
இந் நிகழ்ச்சிகளில் வெற்றி பெறுபவர்களிற்கு சபோனா ஸ்தாபனத்தில் பாவிக்க கூடிய பத்திரங்கள் வழங்கப்படும். ஒவ்வொரு பத்திரமும் $25 பெறுமதியானவை.

# விளையாட்டுத் தகவல்கள் (38)

-எஸ். கணேஷ்



## கிரிகெட் சம்பியன் அவுஸ்திரேலியாவிற்கு தொடர்ந்து படுதோல்விகள்!!!

கிரிகெட் உலகில் தன்னைவிட எவருமேயில்லை என்ற இறுமாப்பில் இருந்த அவுஸ்திரேலியா அணிக்கு அடுத்தடுத்து இலங்கை அணி தோல்விகளை கொடுத்த வண்ணம் உள்ளது. AIWA Cup Final இறுதியாட்டத்தில் இலங்கை அணியிடம் படுதோல்வி அடைந்த அவுஸ்திரேலியா அணி மீண்டும் முதல் Test இல் இலங்கை அணியிடம் தோல்வி அடைந்தது. 5 நாட்கள் ஆடப்பட வேண்டிய Test ஆட்டத்தை மூன்று நாட்களிலேயே வெற்றியை பெற்று இலங்கை அணி முடித்துக் கொண்டது. இதில் மேலும் சிகரம் வைத்தாற்போல் அவுஸ்திரேலிய அணியை இனிங்ஸ் ஆல் தோல்வி அடையும் நிலைக்கு இலங்கை அணி கொண்டு வந்தது. ஆனாலும் அவுஸ்திரேலியா அணி 6 விக்கெட்டுக்களால் தோல்வியை தழுவிக் கொண்டது.

உலகத்திலேயே கிரிக்கெட் வீரர்களை எல்லாம் எள்ளி நகையாடும் அவுஸ்திரேலிய அணியை தற்போது உலகமே எள்ளி நகையாடும் நிலைக்கு இலங்கை அணி கொண்டு வந்துள்ளது. இதிலும் சிறப்பாக கடந்த பல வருடங்களாக 1996ம் ஆண்டு இலங்கை அணியிடம் நன்றாக வாங்கி கட்டிய பின் பல பிரச்சனைகளையும். முக்கியமாக தமிழ் வீரன் முரளீதரனுக்கு பல பிரச்சினைகளையும் கொடுத்து வந்தது. தற்போது தருணம் பார்த்து இலங்கை அணி அடித்துள்ளது.

இதில் முக்கியமாக குறிப்பிட வேண்டிய விடயம் என்னவெனில் 1996ம் ஆண்டு இலங்கை அணி World Champion பட்டத்தைப் பெற்றவுடன் அவுஸ்திரேலிய அணி இலங்கை அணியை அதிஸ்டவசத்தாலேயே வென்றது என ஏளனம் செய்தார்கள். ஆனால் இலங்கை அணி 1996 World Champion வென்றவுடன் தொடர்ந்து இருவருடங்கள் பல சுற்றுப் போட்டிகளில் வென்று தாங்கள் உண்மையிலேயே Real Champion என்று நிரூபித்தார்கள்.

ஆனால் அவுஸ்திரேலியா அணியோ 1999 World Champoin பட்டத்தை பெற்றவுடனேயே தோல்விகள். தற்போது அவுஸ்திரேலியா அணி உண்மையிலேயே அதிஸ்டவசத்தாலேயே வென்றுள்ளது என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

அவுஸ்திரேலிய அணியும் இலங்கை அணியும் மோதிய முதல் Test ஆட்டத்தில் Test ஆட்டத்தில் மட்டுமே ஆடுவதற்கு அனுமதி பெற்ற அரவிந்த டி சில்வா மீண்டும் தனது திறமையை நிரூபித்துள்ளார். அத்துடன் முரளீதரனும் அதிகளவு விக்கெட்டுக்களை இரண்டு இனிங்சிலும் பெற்றுள்ளார். இவ்வாட்டத்தில் இலங்கை சார்பாக அரவிந்த டி சில்வாக்கு Man of the Match விருது வழங்கப்பட்டது.

**இதனுடைய Score விபரங்களை இங்கு காணலாம்.**

| Australia 1st innings | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| MJ Slater | lbw | b Vaas | 0 | 2 | 0 | 0 |
| GS Blewett | lbw | b Zoysa | 0 | 4 | 0 | 0 |
| JL Langer | c de Silva | b Vaas | 7 | 21 | 1 | 0 |
| ME Waugh | | c & b Vaas | 6 | 21 | 1 | 0 |
| *SR Waugh | c de Silva | b Zoysa | 19 | 35 | 3 | 0 |
| RT Ponting | | c & b Muralitharan | 96 | 160 | 10 | 1 |
| +IA Healy | st Kaluwitharana | b Muralitharan | 11 | 14 | 1 | 0 |
| SK Warne | c Atapattu | b Zoysa | 0 | 9 | 0 | 0 |
| JN Gillespie | lbw | b Muralitharan | 41 | 124 | 5 | 0 |
| CR Miller | c Atapattu | b Muralitharan | 0 | 2 | 0 | 0 |
| GD McGrath | not out | | 4 | 15 | 1 | 0 |
| Extras | (nb 4) | | 4 | | | |
| Total | (all out, 67.1 overs) | | 188 | | | |

FoW: 1-0 (Slater, 0.2 ov), 2-4 (Blewett, 1.4 ov), 3-9 (Langer, 6.3 ov), 4-16 (ME Waugh, 8.2 ov), 5-40 (SR Waugh, 18.5 ov), 6-59 (Healy, 23.1 ov), 7-60 (Warne, 24.5 ov), 8-167 (Gillespie, 59.6 ov), 9-171 (Miller, 61.2 ov), 10-188 (Ponting, 67.1 ov).

| Bowling | O | M | R | W | |
|---|---|---|---|---|---|
| Vaas | 16 | 2 | 43 | 3 | (3nb) |
| Zoysa | 13 | 2 | 38 | 3 | (1nb) |
| Muralitharan | 25.1 | 4 | 63 | 4 | |
| Jayasuriya | 5 | 0 | 5 | 0 | |
| Chandana | 8 | 1 | 39 | 0 | |

| Sri Lanka 1st innings | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| *ST Jayasuriya | lbw | b McGrath | 18 | 18 | 2 | 0 |
| MS Atapattu | c Langer | b Miller | 25 | 58 | 2 | 0 |
| RP Arnold | lbw | b Miller | 19 | 49 | 2 | 0 |
| PA de Silva | c Ponting | b Warne | 78 | 146 | 13 | 0 |
| DPMdeS Jayawardene | c Ponting | b Warne | 46 | 70 | 7 | 0 |
| A Ranatunga | c Healy | b Warne | 4 | 4 | 1 | 0 |
| +RS Kaluwitharana | | b Miller | 9 | 18 | 2 | 0 |
| UDU Chandana | c sub (ML Hayden) | b Warne | 12 | 28 | 3 | 0 |
| WPUJC Vaas | not out | | 2 | 6 | 0 | 0 |
| DNT Zoysa | c Miller | b Warne | 7 | 3 | 1 | 0 |
| M Muralitharan | c McGrath | b Miller | 0 | 3 | 0 | 0 |
| Extras | (b 4, lb 7, nb 3) | | 14 | | | |
| Total | (all out, 66.3 overs) | | 234 | | | |

FoW: 1-22 (Jayasuriya, 6.1 ov), 2-69 (Arnold, 20.2 ov), 3-70 (Atapattu, 20.6 ov), 4-177 (Jayawardene, 47.3 ov), 5-181 (Ranatunga, 49.1 ov), 6-197 (Kaluwitharana, 55.1 ov), 7-223 (Chandana, 63.4 ov), 8-226 (de Silva, 65.2 ov), 9-234 (Zoysa, 65.6 ov), 10-234 (Muralitharan, 66.3 ov).

| Bowling | O | M | R | W | |
|---|---|---|---|---|---|
| McGrath | 18 | 5 | 66 | 1 | (3nb) |
| Gillespie | 12 | 2 | 43 | 0 | |
| Miller | 20.3 | 6 | 62 | 4 | (1nb) |
| Warne | 16 | 4 | 52 | 5 | |

| Australia 2nd innings | | | R | B | 4 | 6 |
|---|---|---|---|---|---|---|
| GS Blewett | c Atapattu | b Muralitharan | 14 | 85 | 2 | 0 |
| MJ Slater | lbw | b Muralitharan | 27 | 50 | 3 | 0 |
| JL Langer | lbw | b Vaas | 5 | 19 | 1 | 0 |
| ME Waugh | | b Vaas | 0 | 5 | 0 | 0 |
| RT Ponting | c Jayasuriya | b Chandana | 51 | 118 | 4 | 1 |
| +IA Healy | | b Muralitharan | 3 | 18 | 0 | 0 |
| SK Warne | run out (Jayasuriya) | | 6 | 10 | 1 | 0 |
| CR Miller | | b Vaas | 8 | 32 | 0 | 1 |
| GD McGrath | not out | | 10 | 29 | 1 | 0 |
| *SR Waugh | absent hurt | | - | | | |
| JN Gillespie | absent hurt | | - | | | |
| Extras | (b 6, lb 5, w 1, nb 4) | | 16 | | | |
| Total | (all out, 60.2 overs) | | 140 | | | |

FoW: 1-37 (Slater, 15.2 ov), 2-49 (Langer, 22.3 ov), 3-49 (ME Waugh, 24.2 ov), 4-49 (Blewett, 27.6 ov), 5-58 (Healy, 33.3 ov), 6-75 (Warne, 37.1 ov), 7-99 (Miller, 46.5 ov), 8-140 (Ponting, 60.2 ov).


COMPUSERVICE International
COMPUTERS & NETWORK
COMPUTERSALES REPAIRS
NEW & USED UPGRADES
NETWORK DESIGN CD BACKUPS
& INSTALLATION SOFTWARES
Contact ALAN SIVA @ (416) 431-3753 * 438-4357 *399-3235
(905) 432-2422 *Fax: (416) 431-5828
Email : compuservice@pathcom.com

TUITION
EXPERIENCED TEACHER IN MATHS & PHYSICS CONDUCT (GROUP / INDIVIDUAL) CLASSES IN CALCULUS, ALGEBRA FINITE MATHS & GEOMETRY FOR O.A.C. STUDENTS & PHYSICS MATHS FOR ALL GRADE FROM 3- 12.
PL. CALL: (416) 431-6774

TUITION
அனுபவம் வாய்ந்த தரமான முதுகலை (M.A.) பட்டதாரி ஆசிரியையினால் KINDER GARDEN இலிருந்து Grade 6 வரையிலான பிள்ளைகளுக்கு Tution சொல்லிக் கொடுக்கப்படும்
PL. CALL: 755-8034

கிரகப் பொருத்தம் பார்த்தல்
சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்பு கணித்தல்
பலன் பாத்தல்
எண் சோதிடப்படி ஆலோசனை கூறுதல்
☎: 299-8361

SABESAN'S
RENOVATIONS FURNITURE
YOU NEED FOR YOUR HOME IMPROVEMENT
EVERYTHING UNDER ONE ROOF
மிகவும் மலிந்த செலவில் உங்கள் வீட்டுத் திருத்த, நிர்மாண வேலைகளுக்கு உடன் நாடுங்கள்
CALL US FOR FREE ESTIMATE
VISIT OUR SHOW ROOM
EVERYDAY LOW PRICE
ஒரு முறை விஜயம் செய்தால் மீண்டும் மீண்டும் உங்களை அழைக்கும்!
6 Chairs + Table 7pc DINING SET $229
6pc BED ROOM SET $599
6pc BED ROOM SET $649
3pc WALL UNIT $399
6pc KIDS BED ROOM SET $299 Bed drawers & Foot board extra
9pc ITALIAN SOLID WOOD DINING SET BEST BUY
limited time 7pc ITALIAN DINING SET BEST BUY
limited time 6pc ITALIAN BED ROOM SET $1250
ON SALE - all Appliances FRIDGE, STOVE, WASHER, DRYER, DISHWASHER.
From $279 BUNK BED
தாங்களே Basement செய்து கொள்வதாயின் அதற்கான சகல பொருட்களும் கொடுக்கப்படும்
Kitchen Cabinet Windows & Doors
Full Basement Work 3-5 கிழமைக்குள் முடிக்காவிட்டால் நாளொன்றுக்கு $100 வீதம் நாம் தருவோம்!
3pc SOFA SET From $449
3pc ITALIAN LEATHER SOFA SET
all MATTRESS on SALE (Nice Selection Available)
Carpet / Ceramic Tiles FROM .99/s.ft Minimum 300 sq.ft FREE Under Pad & Installation
TILES CERAMIC FLOOR TILE (6"x 6") from $1.26 /s.ft
TILES WALL TILE from $0.22 /pc
HARD WOOD FLOOR PARQUET $3.99 /S.FT (SUPPLIED + INSTALLED) Min. 250 s.ft STRIPWOOD Available too
Attention உங்கள் கவனத்துக்கு!
PAINT MADNESS SALE (Latex Flat, Semi Gloss, Oil, Primer. ETC) Latex Flat From $7.99/gal First Come First Served, Limited Stock. Gallon or 5 gal Pale available
அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்.
PAINT UNBEATABLE PRICE FROM $7.99/Gal with Min. 5 Gal. pale purchase
390 Progress Av. Unit. 4, (N/W Corner of Brimley & Progress) Scarborough, ON
We Open Tuesday to Friday 11 - 8 p.m., Sat. 11 - 6 p.m., Sun. 11 - 5 p.m. Monday - CLOSED
ANICKO INTERIOR INC.
(416) 562-9090
(416) 605-1990
CASH & CARRY ITEMS, PAINT, WALL PAPER, RUGS, CARPET, TILES etc..
VERY SPECIAL DEALS ON BASEMENT, WASHROOM, KITCHEN, RENOVATION AND FURNITURE & MUCH MUCH MORE...

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

-தொகுப்பு - பரம் & சண்

### 1965

1. அன்புக்கரங்கள்
2. ஆனந்தி
3. அசைமுகம்
4. ஆயிரத்தில் ஒருவன்*
5. இதயக் கமலம் *
6. இரவும் பகலும்
7. உன்னைப் போல் ஒருவன்
8. எங்க வீட்டுப் பெண்
9. எங்கவீட்டுப் பிள்ளை *
10. என்னதான் முடிவு
11. ஒரு விரல்
12. [illegible] தாய்
13. கல்யாண மண்டபம்
14. [illegible]கரை விளக்கம்
15. கார்த்திகை தீபம்
16. காட்டு ராணி
17. காக்கும் கரங்கள்
18. குழந்தையும் தெய்வமும்
19. சரசா பி. ஏ.
20. சாந்தி
21. நாணல்
22. நீ
23. நீர்குமிழி
24. நீலவானம்
25. தாழம்பூ
26. தாயின் கருணை
27. தாயும் மகளும்
28. திருவிளையாடல்
29. பழநி
30. படித்த மனைவி
31. பணம் படைத்தவன்
32. பணம் தரும் பரிசு
33. பஞ்சவர்ணக்கிளி
34. பூமாலை
35. பூஜைக்கு வந்த மலர்
36. மகனே கேள்
37. வல்லவனுக்கு வல்லவன்
38. வழிகாட்டி
39. வாழ்க்கைப் படகு
40. விளக்கேற்றியவள்
41. வீர அபிமன்யு
42. வெண்ணிற ஆடை*
43. ஹலோமிஸ்டர் ஜமீந்தார்


'ஆயிரத்தில் ஒருவன்'

கடந்த இதழில் 1964ம் ஆண்டில் வெளியான படங்களைப் பற்றி எழுதியிருந்தோம்.

இனி 1965ம் ஆண்டில் வெளிவந்த தமிழ்த் திரைப்படங்களைப் பற்றிய மலரும நினைவுகளைப் பார்ப்போம். இவ்வாண்டு தமிழ் சினிமாவின் ஆரோக்கியமான ஆண்டு என்று கூடச் சொல்லலாம். வெளியான படங்கள் சுமார் 43 படங்களாகும். நடிகர் திலகம் நடித்த 'அன்புக் கரங்கள்', 'சாந்தி', 'நீலவானம்', திருவிளையாடல்', 'பழநி' ஆகிய 5 படங்களும் மக்கள் திலகம் நடித்த 'ஆசைமுகம்', 'ஆயிரத்தில் ஒருவன்' 'எங்க வீட்டுப் பிள்ளை', 'கன்னித் தாய்', 'கலங்கரை விளக்கம்', 'தாழம்பூ', 'பணம 'படைத்தவன்' ஆகிய 7 படங்களும். மக்கள் கலைஞர் ஜெயசங்கர் முதன் முதலில் அறிமுகமாகிய ஜோசப் தனியத்தின் 'இரவும் பகலும்' ஜனாதிபதியின் நற்சான்றிதழ் பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனின் 'உன்னைப் போல் ஒரு ஒருவன்' சிவகுமார் முதன் முதல பா[illegible]று அறிமுகமாகிய 'காக்கும் கரங்கள்' பேபி பத்மினி இரு வேடங்களில் நடித்த 'குழந்தையும் தெய்வமும்' இயக்குனர் கே. பாலசந்தரின் நாடகங்களான 'நாணல்', 'நீர்குமிழி' கலைஞரின் 'பூமாலை' (எஸ். எஸ் ஆர், விஜயகுமாரி) ஜெயலலிதா ஆகிய மூவரும் மூர்த்தி (வெண்ணிற ஆடை மூர்த்தி) நிர்மலா ஆகிய மூவரும் முதன் முதலில் அறிமுகமாகிய ஸ்ரீதரின் 'வெண்ணிற ஆடை' மற்றும் எஸ். எஸ். ஆர்., ஜெமினி, ஏவி.எம். ராஜன், ரவிச்சந்திரன் பங்குபற்றிய படங்களுடன், கே. ஆர். விஜயா இரட்டை வேடமேற்ற 'இதயக் கமலம்' கே.எஸ். கோபாலகிருஷ்ணன் இயக்கத்தில் வெளியான 'என்ன தான் முடிவு' எனப் பல சிறப்பு படங்கள் வெளிவந்த ஆண்டு 1965 ஆகும். தேசிய அளவில் சிறந்த கதைய-மைப்புக் கொண்ட படங்களையும் பல பிரமிக்கத்தக்க புது முகங்களையும் திரையுலகம அடையாளம் கண்டது. புரட்சி நடிகர் முதன் முதலில் ஜெயலலிதாவுடன் இணைந்த படமான 'ஆயிரத்தில் ஒருவன்' இவ்வாண்டுக்குரிய படமேயாகும். கே. ஆர். விஜயா, ரவிச்சந்திரன், இணைந்த படமான 'இதயக்கமலம்' சிவாஜியின் 'திருவிளையாடல்' எம். ஜி. ஆரின் 'எங்கவீட்டுப் பிள்ளை' குட்டி பத்மினி நடித்த 'குழந்தையும் தெய்வமும்' ஆகியவை இவ்வாண்டின் வெள்ளி விழாப் படங்களாகும்.


மற்றும் 'பஞ்சவர்ணக் கிளி', 'வாழ்க்கைப்படகு', 'காக்கும் கரங்கள்' உட்பட சிவாஜி, எம்.ஜி. ஆர்., எஸ். எஸ். ஆர், ஜெமினி, ஜெய்சங்கர் ஆகியவர்களின் படங்கள் அனைத்தும் 100 நாட்களைக் கடந்தன.

ஜெயா வாஹினி உரிமையாளர் திரு. பி. நாகிரெட்டியார் தயாரித்த 'எங்க வீட்டுப் பிள்ளை' மக்கள் திலகத்தின் திரையுலக வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்த வெள்ளி விழாப் படமாகும். சிவாஜி, எம்.ஜி.ஆர்., ஜெமினி, எஸ்.எஸ்.ஆர் என்ற ராஜாக்களின் சாம்ராஜ்யத்திற்குள் இளவரசர்களாக சிவகுமார், ஜெய்சங்கர், ஏவி. எம். ராஜன், என்ற புதிய தலைமுறைக் கலைஞர்களும்.... சினிமா இரசனையைத திசைமாற்றிய கே. பாலசந்தரும் மெல்ல மெல்ல தமிழ் சினிமாவில் புதிய பரிமாணங்களை அடையாளம் காட்டிய (நாணல், நீர்குமிழி, நாடகங்கள் திரைவடிவம பெறுகின்றன) புதுமை ஆண்டாகும் இது.

(தொடரும்)

### 1965ம் ஆண்டில் சென்னை சினிமா இரசிகர் சங்கத்தின் விருதுகள் விபரம்

| | |
|---|---|
| படம்: | எங்க வீட்டுப் பிள்ளை |
| சிறப்புப் படம்: | திருவிளையாடல் |
| நடிகர். | எம்.ஜி இராமச்சந்திரன் (எங்கவீட்டுப் பிள்ளை) |
| நடிகை: | கே.ஆர். விஜயா (இதயக் கமலம்) |
| உபநடிகர்: | மேஜர் சுந்தரராஜன் (நாணல்) |
| நகைச்சுவை நடிகர்: | நாகேஷ் (திருவிளையாடல்) |
| குழந்தை நட்சத்திரம்: | பேபி பத்மினி (குழந்தையும் தெய்வமும்) |
| பின்னணி: | TMS, பி. சுசிலா |


Thiruvilayadal
1965

## நான் வாழப் போகிறேன்

-வீணை மைந்தன்



### சுவடு 38

'பராசக்தி' திரைப்படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானதிலிருந்தே வி. சி. கணேசன் என்று அழைக்கப்பெற்ற நமது நடிகர் திலகத்திற்கும் தமிழ்ச் சகோதரிகள் தாய்மார்களுக்குமிடையே ஒரு பாசவலை பின்னப்பட்டு விட்டது என்றே கூறவேண்டும்.

எப்படி கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் திரைக்கதை அமைத்து வசனம் எழுதிய பெரும்பாலான படங்களில் "பெண்ணுரிமைக்காக வாதாடியும் - பெண்களைச் சமுதாயத்தில் உயர்ந்தவர்களாகக் காட்ட காட்சிகளும், கருப்பொருளும்' கையாளப்பட்டனவோ அவ்விதமே நடிகர் திலகம் எடுத்துக் கொண்ட பெரும்பாலான கதாபாத்திரங்கள் 'தாய்க்குலத்தின்' காப்பாளனாக பண்புள்ள சகோதரனாக உயர்ந்த கணவனாக - சிறந்த குடும்பத் தலைவனாகச் சித்தரிக்கப்பட்டிருந்தமையை நாம் அவதானிக்கிறோம். 'சிவாஜி' போன்ற அண்ணனாக எங்களுக்கோர் ' அண்ணா' வேண்டும் என்று சகோதரிகள் 'பராசக்தி' மூலம் உதாரணபுருஷரை அடையாளம் கண்டு கொண்டார்கள்.



'டாக்டர் ரவி' போன்று எங்களுக்கோர் கணவன் வேண்டும் என்று 'பாலும் பழமும்' படம் பார்த்தவர்கள் கனவு காணத் தொடங்கிவிட்டார்கள். சுமார் 45 பல்வேறு திறமைவாய்ந்த திரைநாயகிகளுடன் இணைந்து பல்வேறு குணச்சித்திர வெளிப்பாடுகளையும் படிப்பினைகளையும் பாமரர்களுக்கும், படித்தவர்களுக்கும் உணர்த்தியவர்......"இப்படித்தான் ஒரு குடும்பத் தலைவன் அல்லது அண்ணன்' தமிழ் சமூகத்தில் பொறுப்புள்ள குடிமகனாக வாழவேண்டும் என்று ஆதர்சபுருஷராக தான் ஏற்று நடித்த பாத்திரங்களின் மூலம் பாடம் சொன்னவர் நமது நடிகர் திலகம் அவர்கள் என்பது தமிழ் திரையுலக வரலாறு.

அவ்வழியில் அவருடன் இணைந்து பல மூத்த பெண் நட்சத்திரங்களைப் பற்றிய இதழ்களையும், பாத்திரப் படைப்புகளையும் இதற்கு முந்திய இதழ்களில் நீங்கள் படிந்திருந்தாலும் இன்னும் பல முன்னணி நாயகிகள் பேசப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவ்வகையில் திருமதி. சௌகார் ஜானகி, திருமதி. சரோர்ஜாதேவி, திருமதி. தேவிகா, திருமதி. கே. ஆர். விஜயா, திருமதி. வாணிஸ்ரீ, திருமதி. சுஜாதா, செல்வி. ஜெயலலிதா ஆகோயோர் முக்கிய கதாநாயகிகள் ஆகிறார்கள். வாழ்க்கையில் சில சமயங்களில் அபூர்வமாகவும், அதிசயமாகவும் சில நல்ல வாய்ப்புகள் ஒவ்வொருவர் வாழ்விலும் கிடைப்பதுண்டு. சொந்த வாழ்க்கையில் நமது நடிகர் திலகத்திற்கு வாய்க்கப் பெற்ற மனைவி அவரது தாயாரின் இன்னொரு வடிவம் என்று தான் சொல்வேன். கையெடுத்துக் கும்பிடக் கூடிய மிகவும் அற்புதமான இல்லத் தலைவி. நிறைந்த குங்குமம் என்றும் அவர் நெற்றியில் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும் " மாமா மாமா" என்று சிவாஜி அவர்களை (அப்படித்தான் வீட்டில் அழைப்பதுண்டு) ஒரு குழந்தையைப் பராமரிப்பது போன்று அவருடைய காரியங்களைக் கவனித்து..... இன்றுவரை நடிகர் திலகத்தின் அனைத்துக் காரியங்களுக்கும் உறுதுணையாக இருந்து வெற்றிகரமான கூட்டுக் குடும்பத்திற்குத் தலைவியாக விளங்குகிறார். பெற்ற தாய், கட்டிய மனைவி, சகோதரி, மகள் என்று பெண்களிடத்து மிகவும் வாஞ்சையுடையவர் சிவாஜி அவர்கள். அத்தகைய அன்பு, பாசம், அரவணைப்பு முழுவதையும் திரைக் கதையில் தன்னுடன் இணையும் நாயகிகள் சகோதரிகள் இடத்து மிகவும் துல்லியமாக வெளிப்படுத்துவார்.

அதனால்தான் குடும்பப் பாங்கான பாத்திரப் படைப்புக்களை அவர் ஏற்று நடிக்கும் போது இரசிகர்களை நெஞ்சுருக வைக்கிறார், நெஞ்சம் விம்மி அழவைக்கிறார். திரையிலும் அவருடன் அபூர்வமான ஜோடிகள் நாயகிகளாக இணைந்தார்கள். அந்த வரிசையில் 'பாகப்பிரிவினை' கண்ணையனோடு (சிவாஜி) முதன் முதல் இணைந்தவர்தான் 'பொன்னி' என்ற பாத்திரமேற்று அடடா!..... நமது நடிகர் திலகத்திற்கிணையாக 'புதிய பறவை' யொன்று ஜோடி சேர்ந்துள்ளதே எனப் பேசவைத்த சகோதரி திருமதி. சரோஜா தேவியவர்கள்.

'பொன்னி' என்ற பாத்திரத்திற்காகவே கவியரசு. கண்ணதாசன் அவர்கள் 'தங்கத்திலேயொரு குறையிருந்தாலும் தரத்தினில் குறைவதுண்டோ....' என்று அர்த்தம் நிறைந்த மிக அழகான முதலிரவுப் பாடலொன்றை இயற்றியிருந்தார். 'ஒரு கணவனுக்கு மனைவியென்பவள் இப்படித்தான் அமைய வேண்டும் அல்லது ஒரு பெண்ணுக்குக் கணவன் இவரைப் போன்றல்லவோ கிடைக்க வேண்டும்", என்று உதாரணம் சொல்லிப் பேசக் கூடியளவு சிவாஜி, சரோஜாதேவி ஜோடி 'பாலும் பழமும்" ஆக இல்லற வாழ்வின் சுவையைத் திரையில் கொண்டு வந்தார்கள்.

'நான் வாழப் போகிறேன்".... எனும் இத்தொடரின் 3ம் பகுதியின் (சுவடு 3) குறிப்பிட்ட ஒரு சம்பவத்தை இங்கு மீண்டும் நினைவூட்டுவது பொருத்தமாக அமைகிறது. சென்னைப் பட்டினத்தில் நான் சந்தித்த சிவாஜி இரசிகராகிய சேலம் மணிநாதன் கூறியவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். 'அண்ணே நான் நடிகர் திலகத்தின் பயங்கர ரசிகன். இதோ நிற்கிறாளே என் மனைவி, இவருடன் நான் மகிழ்ச்சியுடன் குடும்பம் நடத்துவதற்கு அவர்தான் அண்ணே காரணம்! 'பாலும் பழமும்' படத்தில் டாக்டர் ரவியாக நடிச்சாரே நம்ம சிவாஜி! வார்த்தைக்கு வார்த்தை சாந்தி... சாந்தி... என்று (சரோஜா தேவியிடம்) தன் மனைவியிடம் அவர் காட்டிய பாசம், பரிவு, காதல் தான் அண்ணே எனக்கு வரப்போகிற மனைவியிடம் எப்படி இல்லறம் நடத்த வேண்டும்", என்கின்ற முதல் பாடம்.

'பாலும் பழமும்' ரவியும், சாந்தியும் தான் எங்கள் இல்லற வாழ்வு இவ்வளவு இனிமையாக இருப்பதற்கு இன்ஸ்பிரேசன் தந்தவர்கள் என்று கூறிய பலரை 'மணி நாதன் தம்பதிகளை' நான் அறிவேன்.

(தொடரும்)

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

-சிவ பஞ்சலிங்கம்



## பகுதி (16)

வகுப்பறைகளில் கற்பிக்கப்படும் பாடத்திட்டத்தின் முதலாம் பகுதியில் "வாகன சாரதி பயிற்சியின் அறிமுகமும் அதன் நன்மைகளும், மற்றும் "கனடா நெறி" சமூகத்தில் கார்கள்" என்னும் தலைப்பிலும் ஆய்வு செய்தோம். இவ் அத்தியாயத்திலும் பாடத்திட்டத்தின் முதலாம் பிரிவின் தொடர்ச்சியினை தொடர்வோம்.

(c) Traffic Laws, Demerit Point System and Responsible Driving.

(வீதி ஒழுங்கு சட்டங்கள், புள்ளி மதிப்பீட்டு இழப்புகள், பொறுப்பாக வாகனம் செலுத்துதல்) என்பன பற்றி கடந்த அத்தியாயங்களில் ஆய்வு செய்தோம். எனவே தற்போது "புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்" என்றால் என்ன? என்ற விடயத்திற்கு வருவோம்.

ஒவ்வொரு வாகன சாரதிக்கும் மொத்தமாக பதினைந்து புள்ளி மதிப்பீடுகள் இருக்கும். இத் தகைமைகளை வைத்தே ஒரு வாகனம் ஓட்டும் சாரதியின் தகைமை மதிப்பிடப்படுகின்றது.

வீதி ஒழுங்கு சட்டத்தின் ஒவ்வொரு பிரிவினையும் ஏதோ ஒரு விதத்தில் மீறி அதற்குரிய சிறு பணத்தண்டனையினை பெறும் போது, அத் தண்டனையினையும் தவறு இழைத்தவர் ஏற்றுக் கொள்ளும் போது ஒவ்வொரு தவறுகளையும் அடிப்படையாக வைத்து சாரதி ஒருவர் தமது புள்ளிகளை இழந்து கொண்டு வருவார்.

வாகனம் செலுத்தும் போது ஏற்படும் தவறுகளையும், சட்டரீதியாக பாதிக்கும் புள்ளி மதிப்பீட்டு இழப்புகளையும் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

<u>பாடசாலை பஸ்களுக்கு நிறுத்த வேண்டிய நேரத்தில் நிறுத்தாமல் சென்றால்.</u>

**ஏழு புள்ளிகள் இழப்பு**

விபத்து நடந்த இடத்தில் வாகனத்தினை நிறுத்தாமல் தப்பி ஓடினால் மட்டும் ஏற்படுவதாகும். இதீ மிகவும் கூடுதலான புள்ளி மதிப்பீட்டு இழப்புக்குரிய குற்றமாகும்.

**ஆறு புள்ளிகள் இழப்பு**

- அவதானமில்லாமல் வாகனம் செலுத்துதல்
- வேகமாக ஓட்டுதல்
- வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட 50 கி.மீ/வேகத்தில் செலுத்துதல். (அதாவது 60 கி.மீ/ வேகத்தில் செலுத்த வேண்டும் என சட்ட ரீதியாக வரையறுக்கப்பட்ட வீதியில் 110 கி.மீ/மணித்தியா வேகத்திற்கு அதிகமாக செலுத்தியதாக கருதப்படும்)
- பாடசாலை பஸ்களுக்கு நிறுத்த வேண்டிய நேரத்தில் நிறுத்தாமல் சென்றால்.

**ஐந்து புள்ளிகள் இழப்பு**

பாதுகாப்பற்ற புகையிரத பாதையில் கடக்கும் பஸ் சாரதிகள் நிறுத்தாமல் சென்றால் இழப்பது ஆகும்.

**நான்கு புள்ளிகள் இழப்பு**

- வீதியில வரையறுக்கப்பட்ட வேகத்தினை விட 30 கி.மீ/மணி - 49 கி.மீ/மணித்தியாலம் வரை அதிகமாக செலுத்தினால்.
- முன்னால் போகும் வாகனத்திற்கு மிகவும் நெருக்கமாக செலுத்தினால்.

**மூன்று புள்ளிகள் இழப்பு**

- வீதியில் வரையறுக்கப்பட்ட வேகத்தனை விட 16கி.மீ/மணியிலிருந்து 29 கி.மீ/மணி வரை அதிகமாக செலுத்தினால்.
- புகையிரத பாதை கடவைகளில் ஒரு வாகனத்தினை முந்தி கொண்டு செலுத்தினால்.
- ஏனைய வாகனங்களுக்குரிய பாதை முதல் உரிமைகளை வழங்காது விட்டால்.
- "நிறுத்துகை குறி' (Stop Sign) "வீதி சைகைகள்" (Traffic Light) "புகையிரத பாதை சைகை" (Railway Crossing Signal) ஆகியவற்றில் நிறுத்த தவறுபவர்கள்.
- பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் வழிகாட்டலுக்கு அடி பணிய மறுப்பது.
- பக்கம் மாறி பிழையான பாதையால் வாகனம் செலுத்துவது. (Driving the Wrong Way on a Divided Road)
- விபத்து பற்றி சட்டி ரீதியாக அறிவிக்க தவறுவது.
- நெருக்கமாக பிரியாணிகளை ஏற்றி செல்வது.

**இரண்டு புள்ளி மதிப்பீட்டு இழப்புகள்.**

- இரவு நேரம் வெளிச்சம் இல்லாத வாகனங்களின் செலுத்துகை.
- தேவையில்லாமல் வாகன கதவுகளை திறந்து வைத்திருத்தல்
- தடை செய்யப்பட்ட திருப்பங்கள்.
- சில சைகைகளுக்கு நெறிப்படுத்த தவறுவது.
- நடை பாதைகளில் பாத சாரதிகளுக்கி நிறுத்த தவறுவது.
- வீதியினை வாகனம் செலுத்த பயன்படுத்துவதில் ஏனைய சாரதிகளுடன் ஒத்துழையாமல் போவது.
- பிழையான வலது, இடது பக்க திருப்பங்கள்
- சைகைகளினால் (Signal Indicator) அறிவிக்கத் தவறுவது.
- தேவையற்ற வேகம் குறைந்த வாகனம் செலுத்துதல்.
- பிரதான வீதிகளில் பின்பக்கமாக வருதல்
- ஆசனப் பட்டி அணியத் தவறுதல்

இதில் G(1) சாரதி பத்திரம், G(2) சாரதி பத்திரம் வைத்திருப்போர் ஒன்பது புள்ளிகளை இழப்பார்கள் என்றால் அவர்களின் சாரதி பத்திரம் ரத்து செய்யப்படும். இரண்டு புள்ளி மதிப்பீடுகளை இழக்கும் போது, முதலில் எச்சரிக்கை கடிதம் அனுப்பப்படும். ஆறு புள்ளிகளை இழக்கும் போது, இது பற்றி கலந்துரையாட அல்லது எச்சரிக்க நேர்முகப் பரீட்சைக்கு வருமாறு போக்குவரத்து அமைச்சினர் அழைப்பார்கள். இவ்வாறு நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அதற்கு செல்லாவிட்டால் சாரதி பத்திரம் ரத்து செய்யப்படும்.

இவ்வாறு ரத்து செய்யப்படும் பத்திரம் அறுபது நாட்களுக்கு மட்டுமே ர்த்து செய்யப்படும். மீண்டும் ரத்து செய்யப்படும் நிலைமை ஏற்படுமாக இருந்தால் அது ஆறுமாத காலமாக இருக்கும். ரத்து செய்யப்பட்டு, மீள் புதுப்பிக்கப்படும் சாரதி பத்திரத்தின் புள்ளி மதிப்பீட்டு இழப்புகள் நான்காக குறைக்கப்படும்.

1994ம் ஆண்டு ஏப்ரல் 16ம் திகதி முழுமையான சாரதி முறை திட்டம் (Graduation System) அறிமுகப்படுத்தப்பட முன்பு, புதிய சாரதி பத்திரம் பெற்றவர்கள் யாவரும் இரு வருடங்கள் அவர்களின் நன்நடத்தை காலமாக கருதப்படுவது வழமையாகும். இவர்கள் ஆறு புள்ளிகளை இழந்தால் சாரதி பத்திரம் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவது வழமையாகும்.


பொதுவாக வாகனங்களுக்கு காப்புறுதி விலை நிர்ணயிக்கும் போதும் வாகனங்களுடன் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கு செல்லும் போது இத் தகைமைகள் முக்கிய இடத்தினை பெறுகின்றது.

முழுமையான சாரதி பத்திரம் (G Licence) பெற்றவர்கள் ஒன்பது புள்ளிகள் இழக்கும் போது நேர்முகப் பரீட்சைக்கு செய்ய வேண்டியவர்களை பதினைந்து புள்ளிகளையும் இழந்தால் சாரதி பத்திரம் ரத்து செய்யப்படும்.

*(தொடரும்)*

*மேலதிக தொடர்புகளிற்கு:* ***சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999***
*(Professional Licensed Instructor in Car & Class Room)*


**EZ DRIVING SCHOOL**



நவீன தன்னியக்க வாகனங்களில் சொந்த மொழியில் பயிற்சி விளக்கங்களுடன் அரச அனுமதி பெற்ற பயிற்சியாளரிடம் பயிற்சி பெற தொடர்புகொள்ளுங்கள்

*JEYAKUMAR* ✆ (416) 283-4100 Cell: 822-6741

(10 வருடகால அனுபவ பயிற்சியாளர்)

**BANANA LEAF**
**Take-out & Catering**

Banana Leaf

**Everyday Special**

ஆடு, மாடு, புரியாணி — Free வட்டிலப்பம் — **$5.50**

**தினமும் ஸ்பெஷல்**

| | | |
|---|---|---|
